# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 74 — 1973 අගෝස්තු 24 වැනි සිකුරාදා — 1973.08.24

74 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 325 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 330 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 333 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 333 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. ... | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானுவித அறிவித்தல்கள் .. .. .. | 340 |


*கவனிக்க.—செலாவணிக் கட்டுப்பாடு (திருத்தம்) சட்ட மூலம் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 17 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### சுன்னுகம் பட்டணசபை

பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 09 ந் உ.

### விதி

1972, ஒற்ருேபர் 27 ந் தேதிய 31 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினுல் கடைசியாகத் திருத்தப்பட்டதும் (176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1,919 எப்பிறல் 4 ந் தேதிய 7,004 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதுமான விதிகள், சுன்னுகம் பட்டின சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசம் சம்பந்தப்பட்ட வரையில் அவற்றிலுள்ள அ 3ம் இலக்க விதியில் காட்டப்பட்டுள்ள கட்டண அளவுத் திட்டத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அளவுத் திட்டத்தை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

| | ஒரு நாளைக்கு | ஒரு மாதத்துக்கு | (திசம்பர் 31 உடன் முடிவடையும்) ஒரு வருடத்துக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) 199 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 10 0 | 100 0 | 500 0 |
| (ஆ) 199 பேருக்கு மேற்பட்டோருக்கு ஆனுல் 399 பேருக்கு மேற்படாத ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. .. .. .. | 15 0 | 150 0 | 750 0 |
| (இ) 399 பேருக்கு மேற்பட்ட ஆட்களுக்கு ஆசன வசதி செய்யப்பட்டிருக்குமிடத்து .. | 20 0 | 200 0 | 1000 0 |

8–926—24.08.73 ம் திகதிய வர்த்தமானி இல. 74

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

***எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.***

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

### மின்சக்திச் சட்டம்

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் பொத்துகெர கிராமச்சபையால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ட. இராசேந்திரா,
மேலதிக நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 7.8.1973.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம்" எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் பொத்துகெர கிராமச்சபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் எனப்பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் பொத்துகெர கிராமச்சபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரக்காரருக்கு விண்ணப்பஞ்செய்ய வேண்டும் ; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப்பத்திரதாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரதாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக்கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னெந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்றுபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப் பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பர்ட்சித்துப் பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவைவடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாள்ர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளில் அல்லது பொருத்துகளில் சில பாகங்களில் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானி காட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர், ஏற்கனவே உபயோகித்து வந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையும் உபயோகிக்க அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும், அப்படியான வேலை ஆரம்பிப்பதற்குக் குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துப் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7. (அ) எவ்வீட்டினும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூசை மாற்றக் கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காருக்கு சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

(8) வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதி சக்தி விநியோகத்தடைப்பாட்டினுல் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிடவேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழுநாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாதவிடத்து தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்கு அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப்பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால், துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்கு சேர்த்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்புவேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப் பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக்கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறுது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு

எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதிபெறுமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றுக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

8–859—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

## வாடிவீடுகள் சட்டம்

(275 ம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ம் பிரிவின் கீழ் தங்காலையிலிருக்கும் வாடி வீடு சம்பந்தமாக, அதற்குரிய அதிகாரியான தங்காலை நகரத்து விசேட ஆணையாளரினுல் ஆக்கப்பட்டு, அப்பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

டீ. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆ ஆகஸ்ட் மீ 10 ந உ.

### விதி

தங்காலை வாடி வீடு தொடர்பாகத் தங்காலை நகர சபையால் ஆக்கப்பட்டு 1956 மார்ச்சு 2 ந் தேதிய 10899 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டதும், 1972 செத்தெம்பர் 29 ந் தேதிய 27 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட விதியினுல் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுனதுமான விதிகளாவன வருமாறு மேலும் இத்தால் திருத்தப்படுகின்றன :—

(1) அதன் கண்ணுள்ள அட்டவணைக்குப் பதிலாக இதன் கண்ணுள்ள அட்டவணையைப் பதிலிடுதல் மூலம்—

### அட்டவணை

" தங்கி நிற்றல் "

| | ரூ. | ச. |
|---|---|---|
| 1. (ஒரு படுக்கையறை தவிர்ந்த) வாடிவீட்டின் எப்பகுதியிலாவது தங்கியிருக்கும் ஒவ்வொருவருக்கும், மணித்தியாலமொன்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு .. | 0 | 25 |

வாடிவீட்டுக்குப் பொறுப்பாளரிடமிருந்து பெறுத உணவை உட்கொள்ளுபவர் ஒவ்வொருவரும் மேலதிகமாக ஐம்பது (50 சதம்) சதம் கட்டணம் செலுத்துதல் வேண்டும். இதில், இருபத்தைந்து சதம் விசேட ஆணையாளருக்குச் செலுத்தப்படவேண்டியதாகும்.

2. வாடிவீட்டில் படுக்கையறையொன்றை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும்—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) எந்நாளிலாவது மு. ப. 6.00 மணிக்கும் பி. ப. 6.00 மணிக்கும் இடைப்பட்ட எவ்வளவு நேரமாயினும் .. | 3 | 0 |
| (ஆ) எந்நாளிலாவது பி. ப. 7.00 மணிக்கும் மறுநாளின் மு. ப. 6.00 மணிக்குமிடைப்பட்ட எவ்வளவு நேரத்துக்காயினும் .. .. .. | 3 | 50 |
| (இ) 12 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத எவ்வளவு நேரத்துக்காயினும் .. .. .. | 6 | 0 |

(இச்சலார் படுக்கை, சார்மனை, அல்லது பஞ்சணை, படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள், துவாய்கள், விளக்குகள் ஆகியவற்றை உபயோகிப்பதற்கான செலவையும் உள்ளடக்குவதாகும்)

## மோட்டார் கார்களும் இதர வாகனங்களும்

| | ரூ. | ச. |
|---|---|---|
| (1) மோட்டார் வண்டிச்சாலையில் வைத்திருக்கப்படும் மோட்டார் கார், மோட்டார் சயிக்கிள், அல்லது வேறு வாகனமொவ்வொன்றிற்கும் அவ்வாறு நிறுத்தி வைத்திருக்கும் ஆள் வாடி வீட்டில் தங்கியிருப்பவராக இருக்குமிடத்து— | | |
| (அ) 1 மணித்தியாலத்திற்கு மேற்படாத காலமெதற்கும் .. (கட்டணமில்லை) | — | |
| (ஆ) 1 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஆனல் 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 0 | 25 |
| (இ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 12 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 0 | 50 |
| (ஈ) 12 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 25 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 1 | 0 |
| (2) மோட்டார் சாலையில் வைத்திருக்கப்படும் மோட்டார் கார், மோட்டார் சயிக்கிள் அல்லது வேறு வாகனமொவ்வொன்றிற்கும், அவ்வாறு நிறுத்தி வைத்திருக்கும் ஆள் வாடி வீட்டில் தங்கியிராதவராகவிருக்குமிடத்து— | | |
| (அ) 1 மணித்தியாலத்திற்கு மேற்படாத காலமெதற்கும் .. | 1 | 0 |
| (ஆ) 1 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஆனல் 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 1 | 25 |
| (இ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 12 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 1 | 50 |
| (ஈ) 12 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் .. | 2 | 0 |
| (3) மோட்டார் சாலையெதிலும் வாகனம் நிறுத்தப்பட்டிருக்காமலிருக்கையில், எந்த நாளிலும் பி. ப. 8.00 மணி முதல் மறுநாள் மு. ப. 6.00 மணி வரை வாடிவீட்டுவளவின் தோட்டத்தில் நிறுத்தி வைத்திருக்கப்படும் மோட்டார் கார், மோட்டார் சயிக்கிள், அல்லது வேறு வாகனமொவ்வொன்றிற்கும்— | | |
| (அ) 2 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலமெதற்கும் (கட்டணமில்லை) | — | |
| (ஆ) 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனல் 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலத்திற்கு .. | 0 | 25 |
| (இ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு .. | 0 | 50 |

### இரவுச் சேவை

| | ரூ. | ச. |
|---|---|---|
| எந்நாளிலாவது பி. ப. 11 மணிக்கும் மறுநாள் மு. ப. 6 மணிக்குமிடையில் பணிவிடை செய்வதற்கு ஒவ்வொரு ஆளுக்கும் அல்லது ஆட்களின் குழுவுக்கும் .. | 2 | 0 |

" எனினும், வாடி வீட்டை அல்லது அதன் பாகமெதனையும் பாவிப்பதற்கு மன்ற அலுவலர்களிடமிருந்து, இதன் கண்ணுள்ள அட்டவணையில் குறித்துள்ள விளக்கப்பட்டுள்ள கட்டணத்தின் வீதத்தின் மூன்றிலொரு பகுதியே அறவிடப்படுதல் வேண்டும். இச்சலுகை, அத்தகைய அலுவலர் ஒவ்வொருவரினதும் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையதாகும். "

8–1087—24.08.73 ந் திகதியவர்த்தமானி இல. 74

### கபில்லவெல கிராமச்சபை

களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்

(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள கபில்லவெல கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வெளியிடப்படுகின்றது.

#### தீர்மானம்

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (அக்கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள் மீது (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இதன் கீழ்க் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் வெளியிடப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக் கட்டணம் :

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்கு குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 15 |
| (ஈ) 1 ரூபா 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 20 |
| (உ) 2 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 30 |
| (ஊ) 3 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 40 |
| (எ) 4 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 50 |
| (ஏ) 5 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 1 0 |
| (ஐ) 10 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1 0 |
| (2) மேலதிக ஒவ்வொரு 5 ரூபாவுக்கும் அல்லது அதன் பகுதிக்கு .. .. | 1 0 |

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூன் மீ 27 ந் உ.

8-1089—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

### அவிசாவலை நகரசபை

களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்

(267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச்சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் அவிசாவளை நகர சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

#### தீர்மானம்

சபையினால் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள் மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1947 ஏப்பிறல் 25 ன் 9,693 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக, இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத் தொகை

வரித்தொகை நீங்கலான அனுமதிக்கட்டணம்

| | | வரிவிகிதம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | 19 சதத்துக்கு மேற்பட ஆனால் 34 சதத்துக்கு மேறபடாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 05 |
| 2. | 34 சதத்துக்கு மேற்பட ஆனால் 44 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 07 |
| 3. | 44 சதத்துக்கு மேற்பட ஆனால் 49 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 09 |
| 4. | 49 சதத்துக்கு மேற்பட ஆனால் 59 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 10 |
| 5. | 59 சதத்துக்கு மேற்பட ஆனால் 69 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 12 |
| 6. | 69 சதத்துக்கு மேற்பட ஆனால் 74 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 14 |
| 7. | 74 சதத்துக்கு மேற்பட ஆனால் 84 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 15 |
| 8. | 84 சதத்துக்கு மேற்பட ஆனால் 94 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 17 |
| 9. | 94 சதத்துக்கு மேற்பட ஆனால் 99 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. .. | 0 19 |
| 10. | 99 சதத்துக்கு மேற்பட ஆனால் 1.24 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 20 |
| 11. | 1.24 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.44 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 25 |
| 12. | 1.44 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.49 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 29 |
| 13. | 1.49 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.74 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 30 |
| 14. | 1.74 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.94 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 35 |
| 15. | 1.94 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 1.99 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 39 |
| 16. | 1.99 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 2.29 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 40 |
| 17. | 2.29 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 2.49 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 46 |
| 18. | 2.49 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 2.99 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 50 |
| 19. | 2.99 ரூபாருக்கு மேற்பட ஆனால் 3.49 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 60 |
| 20. | 3.49 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 3.99 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 70 |
| 21. | 3.99 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 4.49 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 80 |
| 22. | 4.49 ரூபாவுக்கு மேற்பட ஆனால் 4.99 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 90 |
| 23. | 5.00 ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்படுமிடத்து— | |
| | (1) முதல் 5.00 ரூபாவுக்கு .. .. .. .. | 1 00 |
| | (2) மேலதிக ஒவ்வொரு 20 சதத்துக்கும் .. .. .. .. | 0 05 |

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிக செயலாளர்
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 30 ந் உ.

8-1090—24.08.73 ம் திகதிய வர்த்தமானி இல. 74

**விசேட ஆணையாளர் பணிமனை—கஹாவத்தைப்பட்டினம்**

*பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்*

**1973 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி**

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக கஹாவத்தைப் பட்டினத்தின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ளனவும் இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளனவுமான அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு இரண்டு வீதமானதும் முறையே யூன் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 6 ந் உ.

*அட்டவணை*

**இல. 1.—நீலகம வட்டாரம்**

*நீலகம பிரதான வீதி :* மதிப்பீட்டு இல. 36, 38, 40, 46, 48, 50, 52, 54, 58, 64/4, 64/5, 64/6, 68, 70, 72, 76, 92, 92/1/1, 94, 33, 35, 37, 43/1, 47, 53.

**இல. 2.—கஹவத்தை வட்டாரம்**

*பிரதான வீதி :* மதிப்பீட்டுஇல. 7, 15, 17, 19, 21, 23, 25, 27, 29, 31, 33, 35, 39, 39/1, 39/3, 43, 43 A, 45, 49, 53, 55, 59, 61, 63, 63/1, 65, 69, 71, 73, 75, 97, 99, 101, 105, 107, 109, 113, 115, 117, 119, 121, 123, 123/1, 123/2, 125, 125 A, 131, 133, 135, 137, 139, 141, 143, 145, 149, 149/1, 157, 159, 161, 163, 165, 167, 173, 175, 177, 177 A, 179, 181, 183, 183 A, 185, 189, 189/1/1, 189/1, 191, 191/1, 191/2, 193, 199, 199/1, 199/2, 203, 205, 211, 217, 219, 221, 223, 225, 227, 231, 233, 235, 243, 245, 247, 251, 255, 259, 263, 267, 285, 287, 299, 307, 135 எ, 211/1, 189 A.

**இல. 3.—நுகவெல வட்டாரம்**

*பிரதான வீதி :* மதிப்பீட்டு இல. 4/1, 4/3, 4/4, 4/6, 6, 8, 10, 12, 12A, 14, 18, 20, 20 A, 26, 26/1, 18, 28 A, 28 B, 32, 34, 36, 38, 40, 42, 44/1, 46/4, 46/5, 46/6, 46/7, 48, 50, 54, 56, 58, 60, 62, 64, 66, 68, 74, 76, 78, 82, 84, 84A, 86, 86 A, 88, 90, 92, 94, 100, 102, 102/1, 104, 106, 106 A, 108, 108 A, 110, 112, 112A, 114, 116, 118, 118/1, 120, 122, 122 A, 124, 124/1, 124, 126, 126/1, 128/1A, 128/2, 130, 134, 136, 138, 140, 142, 144, 148/1, 148/2, 148/3, 152, 154, 156, 158, 160, 160A, 162, A, 168, 168A, 168/1, 168/7, 168/8, 168/9, 168/10, 168/11, 168/12, 168/18, 168/19, 168/20, 168/22, 168/23, 168/24, 170, 172, 174, 178, 178, 180, 182, 184, 186, 188/1, 190, 194, 228/2, 262, 262/1, 168/8 B, 168/1 A, 168/22A, 156/1, 156/2, 156/3, 156/4

*புதிய வீதி :* மதிப்பீட்டு இல. 5, 21/1, 21/12, 21/13, 23/1, 25, 8, 10, 12, 14,

*கோவில் வீதி :* மதிப்பீட்டு இல. 25, 27, 29, 35, 37, 39, 41, 43, 2, 4, 14, 24, 38.

*எலுறஞ்ஞ வீதி :* மதிப்பீட்டு இல. 2, 4, 8.

*குப்பு வீதி :* மதிப்பீட்டு இல. 1, 3, 5, 7, 2, 4, 6, 14, 16, 18

8–1093—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்**

*13 ஆம் பிரிவின் படியான அறிவித்தல்*

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கனகநாயகம் நல்லைநாதன் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்து கோப்பாய் கிராமச் சபையின் 14 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. மாணிக்கம் சிவபாதம் அவருடைய தெரிவின் பின்னர் சபைக்கு அறிவிக்காமல் சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து யாழ்ப்பாண மாவட்டத்து கோப்பாய் கிராம சபையின் 14 ஆம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. மாணிக்கம் சிவபாதம் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து அங்கத்தவர் பதவியை விட்டு நீங்கியுள்ளாரென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

க. நல்லைநாதன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 14 ந் உ.

8–1080—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**நெல்லியடிப் பட்டினசபை**

*பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்*

**1973 ம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதும் தண்ணீர்ச் சேவையினால் பயனடைவதுமான பிரதேசத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் இரண்டு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1973 ம் ஆண்டுக்கு நெல்லியடிப் பட்டினசபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு யூலை மீ 31 ந் உ.

*அட்டவணை*

நெல்லியடிப் பட்டினத்தினுள் அமைந்துள்ளதும் தண்ணீர் விநியோகத் திட்டத்தின் ஏதாவது விநியோகத் தூண்கள் அமைக்கப்பட்ட ஏதாயினும் குழாயின் ஏதாயினும் இலக்கிலிருந்து 100 அடி தூரத்தினுள் உள்ளதுமான பிரதேசம்.

8–1092—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

**தெல்தெனியவரைப் பட்டினம்**

*பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்*

**1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக தெல்தெனியவரைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் இரு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1973 ம் ஆண்டுக்கு தெல்தெனியவரைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ஈ. வீ. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ந் உ.

8–1091—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

# பதவிகள் — வெற்றிடம்

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

**2. சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

**3. நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவீதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் தேர்றியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

**4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

**குறிப்பு.**—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**குறிப்பு.**—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

**குறிப்பு.**—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

**5.** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து சிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

**7. வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும்பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சயர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப்பத்திரம்**

**உள்ளூராட்சிச் சேவை**

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(..........) **பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

(ஆ) ...................... பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
தேசியஇனம் :————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—
————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்

(ஆ) பிறந்த திகதி :— வருடம் :————. மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) அவரது பிதா :————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன :————.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் [illegible])

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது [illegible] கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|---|
| | பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 | .................... | ...... | ...... | 1 .................... | ...... | ...... |
| 2 | .................... | ...... | ...... | 2 .................... | ...... | ...... |
| 3 | .................... | ...... | ...... | 3 .................... | ...... | ...... |
| 4 | .................... | ...... | ...... | 4 .................... | ...... | ...... |
| 5 | .................... | ...... | ...... | 5 .................... | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப.(சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————,
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழிநுட்ப/தொழில் அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றைவிட்ட திகதிகளுடன் தருக):—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர்? :————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————,
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

**உள்ளூராட்சிச் சேவை**

உணவுப் பரிசோதகர் பதவி

உள்ளூராட்சிச் சேவையிலுள்ள உணவுப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. **திரட்டிய வேதன அடிப்படை.**—வருடாந்தம் ரூபா 5,736—6 × 144—81 × 80—6 × 240—ரூபா 9,480. இலவச கோலவுடைகள் தரப்படும்.

3. **வேண்டிய தகைமைகள்.**—இறைச்சியும் மற்றைய உணவுகளுக்கான ரோயல் சுகாதார ஸ்தாபனத்தின் (இங்கிலாந்து) சான்றிதழ்கள் விண்ணப்பதாரர்களிடம் இருத்தல் வேண்டும்.

4. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைத் தயவுசெய்து பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும். 24.09.1973 க்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அல்லது அது சம்பந்தமான தொடர்புகள், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக் கூடாது. குறிப்பிட்ட இப் படிவத்திலுள்ள பின்வரும் அம்சங்கள் பதிலாகச் சேர்க்கப்பட வேண்டும் :—

"11. (அ) தற்போதைய ஊழியம், (1) இறைச்சியும் மற்றும் உணவுகளுக்குமான ரோயல் சுகாதார ஸ்தாபனத்தில் சான்றிதழ் பெற்ற திகதி,

(2) தற்போதைய வேதனமும், வேதன அடிப்படையும்,

(3) உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது அரசாங்கத்தின் கீழ் ஊழியம் செய்யப்பட்ட பதிவுகள், வகித்த பதவிகளும், காலப்பகுதியும் இவற்றைத் தருக. 17—நீக்கப்பட வேண்டும். "

6. விண்ணப்பம் தபாலிற் காணாமற் போய்விட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாட்கள் வரைக்கும் தமது விண்ணப்பங்களைத் தாமதிப்பவர்கள் தமது இழப்பிலேயே அவ்விதம் செய்பவர்களாவர்.

7. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவை குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைத்தன என்று உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அல்லது தலைவர், தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சிபார்சு செய்தாலன்றி அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பெர்னாண்டோ,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 11 ந் உ.

8-981—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### உள்ளூராட்சிச் சேவை

தரம் 5 செயலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சை—21.10.72

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், தேர்ந்தெடுக்கப்பட்டு, 29.6.73 ந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் 4 வது பகுதியிற் பிரசுரிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுடன் சேர, கீழ்க்காணும் பரீட்சார்த்தியும் நியமனத்தின் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் அறியத்தரப்படுகிறது.

(1) கே. கே. இராஜரத்தினம், மாநகரசபை, கொழும்பு.

2. உடனடியாக அவருக்கு நியமனம் கொடுப்பதற்கு அதிகாரசபை கையேற்கவில்லை. பதவி வெற்றிடம் வரும்பொழுது நியமனம் கொடுக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந் உ.

8-912—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

### உள்ளூராட்சிச் சேவை

தரம் 5 செயலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சை—25.9.1971

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், தேர்ந்தெடுக்கப்பட்டு, 29.9.72, 9.3.73 தேதியிட்ட இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் IV வது பகுதியிற் பிரசுரிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுடன் சேர, கீழ்க்காணும் பரீட்சார்த்தியும் நியமனத்தின் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் அறியத்தரப்படுகிறது :—

(1) டி. எல். தசநாயக, மாநகரசபை, கொழும்பு.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை,

த. பெ. 430,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந் உ.

8-913—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

# துணை விதிகள்

### பேருவலைப் பட்டினம்

நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் பேருவலைப் பட்டினத்து விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந் உ.

**கட்டடங்களின் மாதிரிப் படங்களைப் பார்த்துப் பரிசீலனை செய்வது சம்பந்தமான துணைவிதிகள்**

1. (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகராபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான வரைபடங்களைப் பரிசோதிப்பதற்காகவும் பரிசீலனை செய்வதற்காகவும் இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படி நிர்ணயிக்கப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும்.

2. 1 ஆவது துணைவிதியின்படி கட்டவேண்டிய கட்டணம் பேருவலைப் பட்டினத்து விசேட ஆணையாளரிடமிருந்து அத்தகையக் கட்டணத்துக்கான கோரிக்கை கிடைத்ததன்மீது அங்கீகாரம் கேட்டு அல்லது சம்மதம் கேட்டு விண்ணப்பிப்பவரால் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அத்தகையக் கட்டணம் செலுத்தப்படும் வரைக்கும் வரைபடமெதுவும் பரிசோதிக்கப்படமாட்டாது அல்லது பரிசீலனை செய்யப்படமாட்டாது.

அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் தளப்பரப்பை விஸ்தரித்தல் உட்பட்ட மாற்றங்களுக்கான வரைப் படங்களுக்கு—

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 2 | 50 |
| (ஆ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 5 | 0 |
| (இ) மொத்தத் தளப்பரப்பு 1,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,500 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 15 | 0 |
| (ஈ) மொத்தத் தளப்பரப்பு 1,500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 25 | 0 |
| (உ) மொத்தத் தளப்பரப்பு 2,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 30 | 0 |
| (ஊ) ஒவ்வொரு மேலதிகமான 1,000 சதுர அடி கொண்ட தொகுதிக்கும் அல்லது அத்தொகுதியின் பகுதிக்கும் .. .. .. | 15 | 0 |
| 2. தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தாது 500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட ஏற்கனவே இருக்கும் கட்டடங்களின் மாற்றங்களுக்கான வரைப்படங்களுக்கு .. | 10 | 0 |
| 3. புதிதாக வரைப்படம் எதையும் சமர்ப்பிக்காது அங்கீகாரத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களுக்கு .. | 10 | 0 |

இவ்வட்டவணையில் " தளப்பரப்பு " என்பதை நிலத்தளத்திலுள்ள அல்லது வேறெந்தத் தளத்திலுமுள்ள இடப்பரப்பு எனப் பொருள்படும்.

8-1095—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

எல். டி.—பி. 43/47

### அப்புத்தளை நகர சபை

நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் அப்புத்தளை நகர சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 154 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந உ.

### துணைவிதி

1. சந்தைகள் சம்பந்தமாகச் சபையினால் ஆக்கப்பட்டு, 1948, மே 14 ஆந் தேதிய 9,863 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான துணைவிதிகள், இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :—

(1) 1 ஆம் துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன் மூலமும் :—

"(1) அப்புத்தளைச் சந்தைக்கான சந்தைப் பிரதேச, அப்புத்தளை நகரசபையின் நிருவாக எல்லைகளினுள் உள்ள பிரதேசமாக விருத்தல் வேண்டும்." ; அத்துடன்

(2) 17 ஆம் துணைவிதியின் (1) ஆம், (2) ஆம் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

"17. (1) இத்துணைவிதி, அப்புத்தளையில் சபையினால் நிறுவப்பட்டுள்ள ஞாயிறு முறைச் சந்தைக்கு அல்லது நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் விற்பனை செய்யாத கொண்டு திரிந்து விற்போருக்கும் ஏற்புடையதாகவிருத்தல் வேண்டும்.

(2) பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், வெல்லம், தேங்காய், மீன், கருவாடு, சில்லறைப் பொருட்கள், மற்றும் தோட்ட அல்லது சேனைப் பயிர் உற்பத்திப் பொருட்கள் எதுவும், அத்தகைய பொருட்களின் உண்மையான பயிர்ச் செய்கையாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் பின்வருமாறு கணிக்கப்பட்ட கட்டணமொன்றைச் செலுத்துவதன் பேரில் சந்தைப் பிரதேசத்துக்குள் எத்தினத்திலும் விற்பனை செய்யப்படலாம் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்திருக்கப்படலாம் :—

(அ) ஞாயிறு முறைச் சந்தையில் ஒவ்வொரு சதுர அடி நிலத்துக்கும் ஐந்து சதங்களைக் கொண்ட கட்டணமொன்று.

(ஆ) வேறு இடங்கள்—

(i) நூறு இருத்தலுக்கு மேற்படாத நிறையுள்ள காய்கறிகளின் ஏதேனும் அளவுக்கு இருபத்தைந்து சதங்களைக் கொண்ட கட்டணமொன்று.

(ii) நூறு இருத்தலுக்கு மேற்பட்ட நிறையுள்ள காய்கறிகளின் ஏதேனும் அளவுக்கு ஐம்பது சதங்களைக் கொண்ட கட்டணமொன்று.

(iii) நாற்பது இருத்தலுக்கு மேற்பட்ட நிறையுள்ள தக்காளியின் ஒவ்வொரு பொதிக்கும் இருபத்தைந்து சதங்களைக் கொண்ட கட்டணமொன்று.

(iv) அத்தகைய பண்டங்கள் எச்சிறு வாகனத்தில் வைத்து விற்கப்படுகின்றனவோ அச்சிறு வாகனம் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாக் கொண்ட கட்டணமொன்று.

(v) அத்தகைய பண்டங்கள் எந்த லொறியில் வைத்து விற்கப்படுகின்றனவோ அந்த லொறி ஒவ்வொன்றுக்கும் இரண்டு ரூபா கொண்ட கட்டணமொன்று.

8-1094—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

---

### ரத்தோட்டைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் ரத்தோட்டைப் பட்டினசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒகத்து மீ 9 ந உ.

### துணைவிதி

இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மனைத்தலங்கள் (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ம் பிரிவின் கீழ் அறவிடப்படும் 1973 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரியினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் :—

#### 1 ம் வட்டாரம்

சந்தை வீதி : 22/8.

மாத்தளை வீதி : 7, 15, 23, 25, 27, 31, 35, 37, 43/1, 47, 57, 59, 61, 67, 71, 75, 75/10, 75/12, 85, 101.

நிக்கோலோய வீதி : 6, 10, 12, 18, 20, 22, 30, 34.

#### 2 ம் வட்டாரம்

நிக்கோலோய வீதி : 105/9, 119, 125, 131, 141, 143, 145, 149, 153, 157, 163, 64, 66, 68, 72, 78, 80, 84, 86, 88, 88 ஏ, 90, 90/4, 100, 102/4, 102/10, 106, 108, 112 ஏ, 126, 130.

#### 3 ம் வட்டாரம்

நிக்கோலோய வீதி : 57, 57/5, 67, 73, 77, 77/2 ஏ, 87.

#### 4 ம் வட்டாரம்

கம்மடுவ வீதி : 7, 13, 15, 25, 25/1ஏ, 25/3, 25/4, 27/1, 27/5, 27/6, 31, 35/1, 41.

நிக்கோலோய வீதி : 9, 13, 15, 21, 23, 41, 47, 49, 51.

#### 5 ம் வட்டாரம்

மாத்தளை வீதி : 14, 18, 20, 24, 30, 30/1, 30/4, 30/6, 32/2, 32/3, 36, 40, 44, 46/3, 52, 56, 58, 60, 66, 72, 72/1, 72/2, 72/3, 80/5, 82, 84.

#### 6 ம் வட்டாரம்

கனேதென்ன வீதி : 7/12, 13, 23, 23/7, 10.

லோங்வில்ல வீதி : 1.

மாத்தளை வீதி : 101/15, 105, 109, 119, 125, 110, 116, 118, 118/2, 120, 120 பீ.

8-927—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74.

ரத்தோட்டைப் பட்டின சபை

பட்டன சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) 152 ஆகிய பிரிவுகளின் கீழ் ரத்தோட்டைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நட்டலுவல்கள், அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒகத்து மீ 9 ந உ.

துணைவிதி

இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள மனைத்தலங்கள் (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ம் பிரிவின் கீழ் அறவிறப்படும் 1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரியின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

1 ம் வட்டாரம்

மாத்தளை வீதி.—5, 13, 15, 17,19,23, 25, 27, 29 31, 33, 35, 37, 43/1, 49, 57, 59, 61, 69, 71, 75/10,

நிக்கோலோய வீதி.—4, 6, 10, 12, 18, 20, 26, 28, 30, 34.

2 ம் வட்டாரம்

நிக்கோலோய வீதி.—119, 123, 125, 129, 147, 149, 44, 46, 48, 50, 52, 64, 68, 70, 74, 80, 84, 90/4, 114 எ.

3 ம் வட்டாரம்

நிக்கோலோய வீதி.—55, 55/3, 57/1, 57/5, 61, 65, 67, 77, 77/2எ, 77/9, 85, 87, 89/1.

4 ம் வட்டாரம்

கம்மதுவ வீதி.— 3, 5, 9, 11, 25, 27/1, 27/5, 2, 4, 6, 10.

நிக்கோலோய வீதி.— 3, 19, 21, 23, 43, 45, 49.

5 ம் வட்டாரம்

மாத்தளை வீதி.—4, 6, 10, 12, 16, 18, 22, 24, 28, 30, 30/6, 32/2, 32/3, 36, 38, 44, 46, 46/3, 48, 52, 54, 56, 66, 72, 80/5, 80/7, 82, 84ரு.

6 ம் வட்டாரம்

கணதெென்ன வீதி.—7/12, 9, 13, 15.

மாத்தளை வீதி.—103/1, 109, 125, 94, 110, 118.

8–923—24.08.73 ந திகதிய வர்த்தமானி இல. 74

---

கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 42 இன் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அடக்கலன்கோறளை மெடபற்றுக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் செய்யப்பட்டனவும் அப்பிரிவின் (3) ம் உட்பிரிவின் பிரகாரம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் படி அவரால் அங்கீகரிக்கப்பட்டனவுமான துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந உ.

நீர்வழங்கல்பற்றிய துணைவிதிகள்

1953 திசெம்பர் 23 ந் தேதிய 10,625 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினல், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அடக்கலன் கோறளை மெடபற்று கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத் துணைவிதிகள் அதன் கண்ணுள்ள 28 ம் பாகத்தின் 1, 11, 16 (2), 28 ஆகிய துணைவிதிகளை உடனடுத்து, இதன் கீழ் எடுத்துக்கூறப்பட்டுள்ள புதிய துணைவிதிகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

1. (1) இந்த துணைவிதிகளில் " தலைவர் " என்ற பதம் மன்றத்தின் தலைவரைக் குறிக்கும்

" மன்றம் " என்றுல் அடக்கலன் கோறளை மெதப்பற்று கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

" வீட்டுப் பாவனைகளுக்காக " என்பது நீர் வழங்கல் தொடர்பான குதிரைகள், மாடுகள் அல்லது வாகனங்களுக்குத் தேவையான நீரை அல்லது விற்பனைக்கு அல்லது கேள்விக்கு வைத்திருக்கும் குதிரைகள், மாடுகள், வாகனங்கள் ஆகியவற்றைக் கழுவுவதற்கான நீரை அல்லது எதும் வியாபாரத்திற்கு, உற்பத்திற்கு அல்லது தொழிலுக்கு அல்லது நீரூற்றுக்களுக்கு அல்லது நீச்சல் தொட்டிகளுக்கு அல்லது வேறு ஏதாவது அலங்கார அல்லது இயந்திர நோக்கங்களுக்கு அல்லது நீர்ப்பாசன நோக்கங்களுக்கு அல்லது கட்டிடம் அல்லது தெருக்கட்டுவதற்கு உபயோகிப்பதற்கு உபயோகமாகும் நீரை உள்ளடக்காது.

(2) தனிப்பட்ட சேவைகளில் கட்டுவதற்காக உபயோகிக்கப்படும் நாகம் பூசிய தேனிரும்புக் குழாயகள் யாவும் மூட்டுக்களும் துவாரங்களும் 'திருகாணியால் பூட்டப்பட்டவையாகச் சதுர அங்குலத்திற்கு 200 இருத்தல்' அமுக்கம் உள்ளதாக, பின்வரும் நிறைகளுடன் பொருத்தக் கூடியதாக இருக்க வேண்டும் :—

½ அங்குல உள்விட்டம் 88 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
¾ அங்குல உள்விட்டம் 125 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1 அங்குல உள்விட்டம் 181 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1¼ அங்குல உள்விட்டம் 256 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1½ அங்குல உள்விட்டம் 320 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
2 அங்குல உள்விட்டம் 405 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.

(3) தனிப்பட்ட சேவையில் கட்டுவதற்காக உபயோகிக்கப்படும் சகல பித்தளைக் குழாய்களும் 200 இருத்தல் சதுரமும் அமுக்கமும் கொண்டு பின்னுறு காணப்படும் நிறைகளுடன் தொடர்புள்ளனவாக இருக்கவேண்டும் :—

½ அங்குல உள்விட்டம் 27 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
¾ அங்குல உள்விட்டம் 39 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1 அங்குல உள்விட்டம் 62 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1¼ அங்குல உள்விட்டம் 76 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
1½ அங்குல உள்விட்டம் 91 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.
2 அங்குல உள்விட்டம் 140 இருத்தல், 100 நேர்கோடான அடிக்கு.

(4) எந்தத் தனிப்பட்ட சேவையினும் கட்டுவதற்கு உபயோகிக்கப்படும் சகல பொலிதீன் குழாய்களும் 1972 : 1953 (குளிர்ந்த நீர்ச் சேவைக்காகக் குறைந்த அமுக்கமுள்ள ஒரு பொலிதீன் குழாய்) பிரித்தானிய அளவு விசேடங்களுடன் தொடர்புடையனவாக, தட்பவெப்ப நிலைகூடும் போது வேகம் குறைவதற்கு இடமளிப்பனவாக இருக்க வேண்டும். அது மிகக் குறைந்த துரித அமுக்கமாகிய 150 அடிகளில் 100 தட்பவெப்பநிலைக்குப் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

(5) எந்தக் தனிப்பட்ட சேவையினும் பூட்டுவதற்கு உபயோகிக்கப்படும் சகல பொலிவினல் குளோரைட்டுக் குழாய்களும் பின்னுறு காணப்படும் நிறைகளுடன் பொருந்துவனவாக இருக்கவேண்டும் :—

| அங்குலங்களில் குழாயின் உள்விட்டம் | | இருத்தலில் 100 நேர் கோட்டு அடிகளின் நிறை |
|---|---|---|
| ½ | .. | 16·8 |
| ¾ | .. | 20·4 |
| 1 | .. | 29·6 |
| 1¼ | .. | 35·6 |
| 1½ | .. | 51·8 |
| 2 | .. | 73·9 |

துரித அமுக்கம் வருமாறு இருத்தல் வேண்டும்.

| அங்குலங்களில் குளாயின் உள்விட்டம் | | நீருள் அடி 75 பாகை துரித அமுக்கம் | | நீருள் அடி 150 பாகை துரித அமுக்கம் |
|---|---|---|---|---|
| ½ | .. | 1220 | .. | 657 |
| ¾ | .. | 980 | .. | 530 |
| 1 | .. | 922 | .. | 495 |
| 1¼ | .. | 760 | .. | 415 |
| 1½ | .. | 610 | .. | 322 |
| 2 | .. | 610 | .. | 322 |

(6) எந்தத் தனிப்பட்ட சேவையினும் கட்டுவதற்கு உபயோகிக்கப்படும் சகல வார்ப்பிரும்புகளாலான குழாய்களின் மூட்டுகள் (இறுக்கமாக ஈயத்தாலும் முறுக்கு நூலாலும் கட்டப்பட வேண்டும்).

(7) எந்தத் தனிப்பட்ட சேவையினும் கட்டுவதற்கு உபயோகிக்கப்படும் சகல ஈயக் குழாய்களின் மூட்டுக்கள் ஈயத்தால் பிணைக்கப்பட வேண்டும்.

நீர் வழங்கலுக்கான கட்டணங்கள்

16 (3) (அ) வீட்டுப் பாவனை நோக்கங்களுக்கான நீர் மானியினூல் அல்லது வேறு வகையினுல் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) மானியினுல் வீட்டுப்பாவனை நோக்கத்திற்காக நீர் வழங்கப்படு மிடத்து சம்பந்தப்பட்ட இடத்தின் உடைமையாளர் அன்றேல் குடியிரு வர் பின்வரும் வீதங்களில் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும் :—

| | கட்டணம் ரூ. ச. |
|---|---|
| ஒருமாத காலத்தில் வழங்கப்பட்ட முதல் 3,000 கலன்களுக்கு | கட்டணமில்லை |
| முதலாவது 3,000 கலன்களுக்கு மேலதிகமாக ஒரு மாதம் அல்லது அதன் பாகக் காலத்தில் வழங்கப்படும் ஒவ் வொரு 1,000 கலன்களுக்கும் அல்லது அதனது பாகத் திற்கு .. .. .. | 0 30 |

(இ) மற்றும் காலத்துக்குக் காலம் மேலேயுள்ள வீதங்களைத் தீர்மானம் மூலம் மன்றம் மாற்றலாம்.

(ஈ) மானியினுல் அல்லாத வேறு வகையினுல் வீட்டுப்பாவனை நோக்கங்களுக்காக நீர் வழங்கப்படுமிடத்துப் பின்வரும் கட்டணங்கள் முன்னதாகவே செலுத்தப்படல் வேண்டும் :

| | |
|---|---|
| காலாண்டு அல்லது அதனுெரு பாகத்திற்கு ½ அங்குலக்குழா யொன்றுடன் தனிப்பட்ட சேவை இணைப்பொன்றிற்கு .. | 2 50 |
| காலாண்டிற்கு அல்லது அதனுெரு பாகத்திற்கு மேலதிக ½ அங்குலக் குழாய் ஒவ்வொன்றிற்கு .. | 2 50 |
| காலாண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு ¾ அங்குலக் குழாயொன்றுடனுன தனிப்பட்ட சேவை இணைப்பொன் றிற்கு .. .. .. | 5 00 |
| காலாண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு மேலதிக ¾ அங்குலக் குழாய்க்கு .. .. .. | 5 00 |
| காலாண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு 1 அங்குலக் குழாயொன்றுடனுன தனிப்பட்ட சேவை இணைப்பொன் றிற்கு .. .. .. | 10 00 |
| காலாண்டிற்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒவ்வொரு மேலதிக 1 அங்குலக் குழாய்க்கு .. .. | 7 50 |

4. (1) (அ) வீட்டுப்பாவனைக்கல்லாத நோக்கங்களுக்கான நீர் மானி யினுல் அல்லது வேறு வகையினுல் வழங்கப்படலாம்.

(ஆ) வீட்டுப்பாவனை அல்லாத நோக்கங்களுக்காக மானியினுல் நீர் வழங்கப்படுமிடத்து வழங்கப்பட்ட ஒவ்வொரு ஆயிரம் கலன்களுக்கும் ஒரு ரூபா வீதம் கட்டணம் கணிப்பிடப்படல் வேண்டும்.

(இ) மானியினுல் அல்லாத வேறு வகையினுல் வீட்டுப் பாவனை அல்லாத நோக்கங்களுக்காக நீர் வழங்கப்படுமிடத்து பின்வரும் கட்ட ணங்கள் முன்னதாகவே சபையினுக்குச் செலுத்தப்படல் வேண்டும் :

(2) முழுவதும் அல்லது பாகத்தில் ஒரு உண்டிச்சாலையாக சாப்பாட்டு இல்லமாக தேநீர்க் கடையாக பான்சாலையாக உறையகமாக, விடுதியக மாக, அல்லது வேறு தொழில் அல்லது வியாபாரம் நிலையான அமையப் பெற வளவுகளுக்கு:

| | கட்டணம் ரூ. ச. |
|---|---|
| ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒரு ½ அங்குலக் குழாயுடனுன தனிப்பட்ட சேவை இணைப்பொன்றிறுக்கு .. | 8 00 |
| ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒவ்வொரு மேலதிக ½ அங்குலக் குழாய்க்கு .. .. | 5 00 |
| ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒரு ¾ அங்குல குழாயுடனுன தனிப்பட்ட சேவை இணைப்பொன்றினுக்கு .. | 10 00 |
| ஒரு மாதத்துக்கு அல்லது அதன் பாகத்திற்கு ஒவ்வொரு மேலதிக ¾ அங்குல குழாயிறுக்கு .. .. | 8 00 |

**மானிகள்**

9. (1) சபையின் நீர் உதவு நிலையத்திலிருந்து எந்தவொரு வள விற்கும் நீர் விநியோகிப்பதை அளப்பதற்கான எல்லா மானிகளும் வழங்கப்படுவதுடன் மன்றத்தினுல் பொருத்தப்பட்டு அது மன்றத்தின் சொத்தாகவிருக்க வேண்டும்.

(2) மானிகள் பொருத்தும் செலவு (தொழில், பொருட்கள், மேற்பார் வையும் சேர்த்து) நீர் வழங்கப்படும் வளவின் சொந்தக்காரரினுல் அல்லது அந்த வளவில் குடியிருப்பவரினுல் முற்பணமாகக் கட்டப்படல் வேண்டும்.

(3) மானியின் மூலம் நீர் வழங்கப்படும் வளவின் சொந்தக்காரர் அல்லது அதில் குடியிருப்பவர் மானியைப் பேணுதல், பழுதுபார்த்தல் ஆகிய செலவுகளைக் கட்டவேண்டுமென்ற பொறுப்புடையவராகார்.

எனினும் அத்தகைய பழுது பார்த்தல் அல்லது புதுப்பித்தல் சொந்தக் காரரின் அல்லது குடியிருப்பவரின் ஏதாவதொரு வேண்டுமென்று செய்யும் செயலினுல் அல்லது அசட்டையினுல் மானிக்கு ஏதாவது ஒரு சேதமேற்பட்டு அதன் நிமித்தம் பழுது பார்க்கவேண்டிய அல்லது புதுப்பிக்க வேண்டிய அவசியமேற்பட்டால் அவர் தலைவரினுல் உறுதி கேட்கப்பட்டபின் அத்தகைய பழுதுபார்த்தலுக்கு அல்லது புதுப்பித்த லுக்கான செலவைக் சபையினிடம் செலுத்த வேண்டும்.

(4) (அ) மானியினுல் நீர் வழங்கப்படும் எந்தவொரு வளவின் சொந்தக்காரரும் காலாண்டிற்கொருதடவை அத்தகைய மானிகளை உபயோகிப்பதற்காகப் பின்வரும் வீதங்களில் கணக்கிடப்பட்ட வாடகையை காலாண்டுக்கு அல்லது அதன் பாகத்துக்கு முற்பணமாகக் கட்டுதல் வேண்டும், அல்லது கட்டுமாறு செய்தல் வேண்டும்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 2 அங்குல மானி | .. | 25 00 |
| 1½ அங்குல மானி | .. | 20 00 |
| 1 அங்குல மானி | .. | 15 00 |
| ¾ அங்குல மானி | .. | 10 00 |
| ½ அங்குல மானி | .. | 5 00 |

(ஆ) இந்தத் துணைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகக் காலாண்டு என்பது ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி 1 ந் தேதி, ஏப்பிரல் 1 ந் தேதி, யூலை 1 ந் தேதி, ஒற்ரோபர் 1 ந் தேதி ஆகிய தேதிகளில் தொடங் கும் அடுத்தடுத்த மூன்று மாதங்களைக் கருதுகின்றது.

10. (அ) எந்தவொரு காலாண்டிற்குமான நீர் நுகர்ச்சி அந்தக் காலாண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் இத்துணைவிதியின் பின் வரும் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்ட விதத்தில் எடுக்கப்பட்ட மானி காட்டும் குறிப்புக்களுக்கிடையேயுள்ள வித்தியாசத்தை கணக்கிடுவதன் மூலம் கணிக்கப்படுகின்றது.

(ஆ) புதிதாகப் பொருத்தப்பட்ட மானியின் விடயத்தில் முதலாவது குறிப்பு அத்தகைய மீற்றர் பொருத்தப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட குறிப்பாகும். பிற எந்தவொரு விடயத்திலும் இறுதிக் குறிப்பு இதற்கு உடனடியாக முந்திய காலாண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட குறிப்பாகும். எந்தவொரு காலாண்டிற்குமான இறுதிக்குறிப்பு அத்தகைய காலாண் டின் இறுதிக்கு முன்போ அல்லது பின்வோ அல்லது உள்ள பத்து நாட்களில் எந்தவொரு நாளினும் எடுக்கப்படவேண்டும். ஆனுல், மீற்றர் திருத்தப்படுவதற்காக அகற்றப்பட்டுக் குறிப்பு எடுக்க இயலாதி ருந்தால் கடைசிக் குறிப்பு அவ்விதம் அகற்றமுன் எடுபட வேண்டும்.

(இ) எந்தவொரு வளவிற்குள்ளும் எந்தவொரு காலாண்டுக் காலத் திலும் இரண்டோ அல்லது அதற்குக் கூடுதலான மானிகள் உபயோ கிக்கப்பட்டிருந்தால் அந்தக் காலாண்டிற்கான நுகர்ச்சி அந்தந்த மானிகளினுல் சுட்டிக்காட்டப்படும் அளவுகளின் மொத்தத் தொகையா கும்.

10. (அ) எப்போதாவது ஒரு மானி ஒழுங்காகத் தொழில்படவில்லை யென்று காணப்பட்டால் அல்லது பழுதுபார்த்தலுக்காக அல்லது மாற்றஞ் செய்வதற்காக அகற்றப்பட்டால் அல்லது புதிய மீற்றர் பொருத்தப்பட்டால் அல்லது பழைய மீற்றர் திரும்பவும் பொருத்தப் பட்டால் அத்தகைய மானியினுல் நீர் வழங்கப்பட்டதென்று கூறும் குறிப்பொன்று வளவில் வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) மானி ஒழுங்காகத் தொழிற்படாவிட்டால் அல்லது பழுதுபார்த்த லுக்காக அல்லது பிற எந்தவொரு காரணத்தின் பொருட்டும் அகற்றப் பட்டால் மானி ஒழுங்காகத் தொழிற்பாடாத காலத்தில் அல்லது மானி இல்லாமல் சேவை வழங்கப்பட்ட காலத்திற்கு, துணைச்சட்டம் 10 (அ) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருந்த போதினும், உடனடியாக முந்திய காலாண்டில் சராசரி நாள் நுகர்ச்சிக்குக் கணக்கிடப்பட்ட வீதத்தில் கணிக்கப்பட்ட வேண்டும்.

11. (அ) எந்தவொரு குடியிருப்பவரும் தமது வளவிற்குள் உள்ள மானியின் செம்மையைப் பற்றிச் சந்தேகித்தால் அவர் உறுதி கேட்பது டன் அவர் சோதனைக் கட்டணமாகிய பத்து ரூபாவில் அரைவாசித் தொகையை கட்டிப் பின் தலைவர் மானியைக் குடியிருப்பவரின் அல்லது அத்தகைய குடியிருப்பவரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எந்தவொரு வரின் முன்னிலையிலும் அத்தகைய மனியைச் சோதனைக்குள்ளாக்கு வார். அத்தகைய சோதனையின் முடிவுக்குத் தலைவரும் குடியிருப்பவரும் கட்டுப்படுவர் என்பதுடன் அந்தக் காலாண்டிற்காகத் துணைச்சட்டம் 9 (4) (ஆ) ல் விவரிக்கப்பட்டுள்ள மீற்றரினுல் சுட்டிக் காட்டப்படும் நீர் அளவு சோதனையின் முடிவின்படி திருத்தப்பட வேண்டும்.

(ஆ) மானியினுல் பதிவு செய்யப்படும் அளவு சரியாகவிருந்தால் அல்லது உண்மையாக வழங்கப்பட்ட அளவு நீரிலிருந்து இரண்டு வீத திற்கு மேற்படாமல் வித்தியாசப்படாமலிருந்தால் பந்தி (அ) ன் கீழ் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட சோதனைக் கட்டணம் சபையினுல் திருப்பி கொடுக்கப்படாமல் வைத்திருக்கப்பட்ட வேண்டும் : மிகுதிக்கட்டணம் குடியிருப்பவரால் சபைக்குக் கொடுபடல் வேண்டும்.

(இ) மானியினால் பதிவு செய்யப்படும் அளவு உண்மையாக வழங்கப்பட்ட அளவு நீரிலிருந்து இரண்டு வீதத்திற்கும் மேற்பட்டு வித்தியாசப்பட்டால் பந்தி (அ) ன் கீழ் முற்பணமாகக் கொடுக்கப்பட்ட சோதனைக் கட்டணம் குடியிருப்பவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

12. (அ) தலைவரால் குறிப்பிடப்படும் நேரங்களில் மானியின் அளவுகள் குறிக்கப்பட வேண்டும். ஆனால் இது காலாண்டிற்குள் மூன்று தடவைகளுக்குக் குறையாமல் கணிக்கப்பட வேண்டும்.

(ஆ) மானியின் அளவு எப்பொழுதாவது குறிக்கப்பட்டால் குறிப்பின் நிருபமொன்று " குடியிருப்பவர் " என முகவரியிடப்பட்டு அந்த மீற்றரினால் நீர் வழங்கப்பட்டுள்ள வளவிற்குள் வைக்கப்பட வேண்டும்.

13. தனிப்பட்ட சேவையொன்றிலிருந்து பெறப்படும் நீர் இங்குள்ள பட்டோலையில் குறித்துள்ள " இ " படிவத்தில் உள்ள விதத்தில் நீர் வழங்குதலைப் பெறுபவர் உடன்படிக்கை செய்தாலேயொழிய வீட்டுத் தேவை தவிர்ந்த பிற நோக்கங்களின் பொருட்டு உபயோகிக்கப்படலாகாது.

ஆனால் அத்தகைய உடன்படிக்கை எவ்வாறிருந்தபோதிலும் சபை சேதங்களுக்கான அல்லது தண்டத்துக்கான எந்தவொரு பொறுப்புக்கும் உட்படாமல் அவருக்கு அத்தகைய நோக்கங்களுக்காக வழங்கப்படும் நீரை அத்தகைய நீர் வழங்கல் பிற எந்தவொருவரினதும் அல்லது பலரின் வீட்டு நோக்கங்களுக்கான வழங்களுடன் தலையிட்டால் அல்லது தலையிடக்கூடியதாகவிருந்தால் தடுத்து வைக்கலாம் அல்லது இடைநிறுத்துகை செய்யலாம் அல்லது குறைக்கலாம்.

14. எந்தவொரு தனிப்பட்ட வளவிற்கும் வழங்கப்பட்ட நீருக்கான விதிப்பணம் அதன் சொந்தக்காரரினால் அல்லது குடியிருப்பவரினால் சபையின் தலைவரிடம் அல்லது அத்தொடர்பில் தலைவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரிடம் இங்குள்ள பட்டோலையில் குறித்துள்ள படிவம் " ஈ " யில் கணக்கு அனுப்பப்பட்டுள்ள தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் கொடுக்கப்படவேண்டும்.

### நிலத்திலுள்ள இணைப்புகள்

15. (1) எவராவது 500 உலேற்று அல்லது கூடிய மின்வலி இயலாற்றல் வேறுபாடு மின்சாரத்தைக் கையாளும் ஏதாவது மாற்றி அல்லது பிற மின்னுபகரணத்தின் பெட்டியிலிருந்து ஏதாவது நிலத்திலுள்ள இணைப்பை நீர் வழங்கும் நிலையின் பகுதியாக அமையும் ஏதாவது குழாய்க்கு அல்லது உபகரணத்திற்கு அல்லது சபையின் நீர் வழங்கும் நிலைக்கு இணைந்த ஏதாவது தனிப்பட்ட வழங்கற் சேவைக்குப் பொருத்தக்கூடாது.

(2) (1) ம் பந்தியில் குறிப்பிட்ட ஏதாவது மாற்றியின் அல்லது பிற மின்னுபகரணத்தின் நிலத்தில் புதையுண்டு மின்தாங்கியை நிலத்துடன் பிணைக்கும் உலோகத்தகடு அல்லது நிலத்திலுள்ள இணைப்பு நீர் வழங்கும் நிலையின் பகுதியாக அமையும் ஏதாவது நிலைக்கு இணைந்த ஏதாவது குழாயிலிருந்து அல்லது உபகரணத்திலிருந்து அல்லது சபையின் நீர் வழங்குவது தனிப்பட்ட வழங்கற் சேவையிலிருந்து குறைந்தது இரு அடிகளுக்கு அப்பால் இருக்க வேண்டும்.

16. மின்சார வெளிச்ச அமைப்பிலிருந்து மின்சாரம் வழங்கப்படும் கம்பியின் அமைப்புக்கு ஏதாவது நிலத்திலுள்ள இணைப்புத் தேவையானபொழுது, அத்தகைய நிலத்திலுள்ள இணைப்பு சபையின் நீர் வழங்கும் நிலையின் பகுதியாக அமையும் ஏதாவது குழாயிலிருந்து அல்லது உபகரணத்திலிருந்து அல்லது சபையின் நீர் வழங்கும் நிலைக்கு இணைந்த ஏதாவது தனிப்பட்ட சேவையிலிருந்து குறைந்தது இரு அடிகளுக்கு அப்பால் பொருத்தப்பட்ட நிலத்தில் புதையுண்டு மின்தாங்கியை நிலத்துடன் பிணைக்கும் உலோகத்தகடு மூலம் செய்யப்படல் வேண்டும்.

17. சபையின் நீர் வழங்கும் நிலையினுடன் இணைந்த நீர்மானி பொருத்தப்பட்ட ஏதாவது இடத்தில் ஏதாவது நிலத்திலுள்ள இணைப்பை அமைக்கும் எவராவது அத்தகைய மானியின் நுழைவாயில் பக்கத்தில் அத்தகைய இணைப்பைப் பொருத்தவேண்டும். அல்லது அத்தகைய மானிக்கு குறுக்காக ஒரு மின்சாரத் தீனையைப் பொருத்த வேண்டும்.

### வீணுவதைத் தடுத்தல்

18. (1) சபையின் நீர் வழங்கும் நிலையுடன் இணைந்த ஏதாவது இடத்தில், ஏதாவது குழாய், குழாயின் திருகுபிடி, குழாய் அடைப்பு மானி அல்லது தனிப்பட்ட நீர் வழங்கும் சேவையின் பகுதியாக அமையும் வேறு பொருத்தலின் அமைப்பு, அளவு, இருப்பு, தன்மை, அல்லது நிலை போது அல்லது தனிப்பட்ட பயனுக்கு நீர் நிலையிலிருந்து வழங்கப்படும் நீர் வீணுவது தவருன பயனீடு அளவுக்கு மிஞ்சிய நுகர்ச்சி அல்லது தூய்மை கெடுதலுக்கு வழிவகுக்கக்கூடியதென அல்லது நீர் நிலையிலிருந்து வழங்கப்படும் நீரின் சரியான கட்டுப்பாட்டிற்கும் பங்கீட்டுக்கும் கெடுதிவிளைக்கிறதென நம்பத் தலைவருக்குக் காரணமிருக்கும்பொழுது இடத்தில் உரிமையாளர் மீது இங்குயேள்ள அட்டவணையில் குறிப்பிட்ட " உ " படிவத்தில் அவர் ஒரு அறிவித்தலை வழங்குவார்.

(2) அத்தகைய ஒவ்வொரு அறிவித்தலும் தலைவர் அவசியமெனக் கருதும் திருத்தியமைப்பை தெளிவாகக் குறிப்பிடும். அத்தகைய திருத்தியமைப்பு அறிவித்தலில் குறிப்பிட்ட அத்தகைய காலத்திற்குள் தலைவரின் திருத்திக்கு உடைமையாளரினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) உடைமையாளரின் பெயர் அல்லது இருப்பிடம் தெரியாத பொழுது 1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அறிவித்தல் அது சம்பந்தப்பட்ட வளவில் தெளிவாகத் தெரிகிற இடத்தில் ஒட்டினுல் உடைமையாளருக்குச் சரியாக வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

19. தலைவர் பின்வருவனவற்றிற்காக ஏதாவது வளவுகளுக்கு நீர் வழங்கலை வழங்காமல் வைத்துக் கொள்ளலாம். நிறுத்திவைக்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது சபையின் தலைப்பெருங்குழாயிலிருந்து அல்லது நீர் வழங்கும் நிலையிலிருந்து அந்த இடங்களிலுள்ள தனிப்பட்ட சேவைக்குழாயின் இணைப்பைப் பிரிக்கலாம் :

(அ) அத்தகைய வளவின் உடைமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் வேண்டுகோளில் ; அல்லது

(ஆ) அத்தகைய வளவுகளிலுள்ள உடைமையாளரிடமிருந்து அல்லது குடியிருப்பாளரிடமிருந்து இந்த உபவிதிகளின் பிரகாரங்களின் கீழ் வரவேண்டிய ஏதாவது பணம் செலுத்தலில் தவறுகை ஏற்பட்டால் ; அல்லது

(இ) அத்தகைய சேவைக்குழாயின் அமைப்பு அல்லது இடுகை அத்தகைய இடங்களின் உடைமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் இந்த உபவிதிகளின் பிரகாரத்திற்கிணங்கச் செய்யப்படாவிட்டால் அல்லது மாற்றப்படாவிட்டால் ; அல்லது

(ஈ) அத்தகைய இடங்களின் உடைமையாளர் அல்லது குடியிருப்பாளர் நீர் வழங்கும் நிலையின் சேதம் அல்லது தூய்மைக்கேடு அல்லது நீரை வீணுக்குதல் அல்லது தவருகப் பயன்படுத்துதல் சம்பந்தமான இந்த உபவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணுக ஏதாவது செயல் அல்லது காரியம் செய்தால் அல்லது செய்யத் தவறினுல்.

20. ஏதாவது குழாயின் திருகுபிடியிலிருந்து குழாயிலிருந்து, மானியிலிருந்து அல்லது அத்தகைய சேவையின் பகுதியாக அமையும் வேறு பொருத்தலில் அமைப்பிலிருந்து நீர் வீணுக ஓடும்பொழுது மன்றத்தின் நீர் வழங்கும் நிலையிலிருந்து தனிப்பட்ட நீர் வழங்கும் சேவை இணைக்கப்பட்ட வீட்டின் அல்லது வளவின் குடியிருப்பாளர் தலைவருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

21. ஏதாவது குழாயின் திருகு பிடியிலிருந்து, குழாயிலிருந்து, மானியிலிருந்து அல்லது தனிப்பட்ட நீர்ச் சேவையின் பகுதியாக அமையும் வேறு பொருத்தலிலிருந்து ஏதாவது இடத்தில் நீர் வீணுக ஓடுவதைக் காணும் பொழுது, தலைவர் அல்லது அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவராவது ஆட்சிமன்றத்தின் தலைப்பெருங்குழாயிலிருந்து மூன்று நாட்களுக்குள் சேவையின் இணைப்பைப் பிரிப்பர், வளவின் உடைமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் வீணுவதின் காரணம் தவிர்க்கப்படும்வரை அத்தகைய சேவை மீண்டும் இணைக்கப்படமாட்டாது.

22. 19, 21 ம் உபவிதிகளில் குறித்த காரணங்களுக்காக இணைப்பைப்பிரித்த ஏதாவது தனிப்பட்ட சேவைக்குழாயினை மன்றத்தின் தலைப்பெருங்குழாயுடன் அல்லது தனிப்பட்ட சேவைக்குழாயினை மன்றத்தின் தலைப் பெருங்குழாயுடன் அல்லது நீர் நிலையுடன் மீண்டும் இணைக்கத் தலைவரால் மதிப்பிடப்பட்ட தொகை மன்றத்திற்கு முற்பணமாக அத்தகைய வளவின் உடைமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படவேண்டும். ஏதாவது செலவிடப்படாத மீதி, வேலை பூர்த்தியாகும் பொழுது உடைமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும் உண்மையான செலவு மதிப்பிட்ட செலவைவிடக் கூடும் பொழுது, மிகைத் தொகை வேலை பூர்த்தியாக்கும் பொழுது உடனே உடைமையாளரால் அல்லது குடியிருப்பாளரால் செலுத்தப்படும்.

### பொது

23. கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது இந்த உப விதிகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிவரும் ஏதாவது நீர் வரி, மானி வாடகை அல்லது வேறு தொகைகளைப் பாதிக்காமல் தலைவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் திருப்திப்பட்டால் அவர் நீர் வழங்கலை வழங்காமல் வைத்துக்கொள்ளலாம், நிறுத்தி வைக்கலாம், குறைக்க அல்லது ஏதாவது தலைப்பெருங் குழாய் பொது நீர் ஊற்று, சேவைக்குழாய்கள், அல்லது மன்றத்தின் நீர் நிலையுடன் இணைந்த வேறு சாதனங்கள் மூலமாக முழுக்க அல்லது பகுதியாக நீர் வழங்கலை வேறு வழியில் திருப்பிவிடலாம் :—

(அ) நீர் வழங்கும் நிலையினுள்ள நீர் போதாமலிருக்கும்பொழுது ; அல்லது

(ஆ) தலைப்பெருங் குழாயை அல்லது நீர் நிலையினை நீட்டும், மாற்றும் அல்லது திருத்தும் நோக்கத்திற்காக அல்லது தலைப்பெருங் குழாய்க்குச் சேவைக் குழாய்களைப் பொருத்தும் நோக்கத்திற்காக அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் அவசியமானது எனக் காணும்பொழுது ; அல்லது

(இ) பொதுக் குழாய்க்கு அதாவது சேதம் அல்லது அதன் நீர் ஏதாவது தூய்மைக்கேடுறும் பொழுது அல்லது வீணபோவது காரணமாக அத்தகைய நடவடிக்கை சூழ்நிலைக்கேற்றது அல்லது அவசியமானது எனக் கருதும்போது ; அல்லது

(ஈ) நீர் நிலைக்கு நெருப்புப் பற்றுதலால் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது அல்லது விளையக்கூடும் எனக் காணும் பொழுது.

24. 15 ம் துணைவிதியின் கீழ் ஏதாவது தனிப்பட்ட சேவைக்குழாயின் அல்லது இணைப்புக்களின் அங்கீகாரம் அல்லது அத்தகைய சேவைக் குழாய் பொருத்தியுள்ள வளவின் உரிமையாளருக்கு அல்லது குடியிருப் பாளருக்கு இத்துணைவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவது அனுமதி அல்லது சலுகை குழாயின் ஏதாவது பகுதியின் வெடிப்பினுல் அல்லது குழாய் இணைப்புக்களின் ஏதாவது பகுதியிலிருந்து நீர் வழிந்தோடலால் ஏற்பட்ட ஏதாவது சேதத்திற்கு ஏதாவது பொறுப்பு ஆட்சிமன்றத்திற்கு ஏதாவது நோக்கத்திற்கு இருப்பதாகக் கருத முடியாது.

25. அத்தகைய இயலாமை வழக்கத்துக்கு மாருன வரட்சி அல்லது ஏதாவது வேலை செய்வதால் வழங்கலில் ஏதாவது தற்காலிக குறுக்கீடு அல்லது தவிர்க்கமுடியாத காரணம் அல்லது இடையூறு காரணமாக ஒப்பந்தம் அல்லது உடன்பாடு அல்லது இன்னெரு வழியின் கீழ் நீர் வழங்க இயலாமைக்கு ஆட்சிமன்றம் நட்டத்திற்குப் பொறுப்பாக மாட்டாது.

26. (1) ஏதாவது கட்டடம் அல்லது கட்டடங்களை நிறுவும் நோக்கத் திற்கு ஆட்சி மன்றத்தின் நீர் நிலையிலிருந்து தற்காலிக இணைப்பினுல் நீர் வழங்கப்படும் பொழுது அத்தகைய கட்டடம் அல்லது கட்டடங்கள் நிறுவப்பட்டவுடன் வழங்கல் துண்டிக்கப்படும்.

(2) (1) ம் பந்தியிற் குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழங்கப்படும் நீருக்காகிய கட்டணங்கள் 16 (4) (இ) ம் துணைவிதியில் குறித்த வீதங்களின்படியாகும்.

27. இத்துணைவிதிகளின் கீழ் ஆட்சி மன்றத்திற்குச் செலுத்தவேண் டிய எல்லாப் பணமும் தலைவருக்கு அல்லது அவரால் அவரின் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்குச் செலுத்தப்படவேண்டும்.

**இத் துணைவிதிகளை மீறுதலுக்குத் தண்டம்**

28. இத் துணைவிதிகளில் ஏதாவதொன்றை மீறும் ஒவ்வொரு சந் தர்ப்பத்திலும் ஐம்பது ரூபாவிற்கு மேற்படாத குற்றம் விதிக்கப்படலாம். தொடரும் குற்றவிடயத்தில் குற்றத் தீர்ப்பின் அல்லது அத்தகைய மீறுதலுக்குக் கவனத்தை ஈர்க்கும் தலைவரின் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தரின் அறிவித்தல் வழங்கப்பட்ட பின் குற்றம் தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாவிற்கு மேற்படாத மேலதிக குற்றம் விதிக்கப்படலாம்.

அட்டவணை

**படிவம் " அ "**

இலக்கம்....................
தலைவர், கிராமாட்சிமன்றம்,
அட்டக்கலன் கோறளை மெதபற்றுக் கிராமப் பிரதேசம்.

....................................................... க்கு பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு தனிப்பட்ட முறையிலான நீர்ச் சேவையின் பொருட்டு;

*கட்டுதல்,
*மாற்றுதல்,
*நீட்டுதல்,
*சுத்தம் செய்தல்.

என்றவற்றுள் ஒன்றுக்கு இத்தால் தங்கள் அங்கீகாரத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கிறேன் :

வீட்டு இல: ..................
வீதி இல: ..................
வட்டார இல: ..............

இத்துடனுள்ள அட்டவணையிற் காட்டியுள்ள மாதிரி.

| | ரூபா |
|---|---|
| *வாடகைக்குடி வசிக்குமிடத்து ஆண்டு வாடகை : | ............ |
| *உடைமையாளர் வசிக்குமிடத்து ஆண்டு வாடகை : | ............ |
| *உள்ள சேவையின் அளவு : | ............ |
| நீர் வீட்டுத் தேவைக்களுக்காக அல்லது வேறு தேவை களுக்காக : | |
| வளவில் குடி இருக்கும் நோக்கம் : | ............ |
| வைப்பாக இடப்பட்டுள்ள தொகை : | ............ |

அட்டவணை

| சொந்த வளவுகளில் குழாய் அமைத்தல் | | குழாய் வாயில்கள் | | | தொட்டிகள் | |
|---|---|---|---|---|---|---|
| நீளம் | பருமன் | இலக்கம் | நிலை | பருமன் | கொள்ளளவு | நிலை |
| | | | | | | |

**குறிப்புகள் :** (தயவு செய்து தெளிவாக எழுதவும்)

*சொந்தக்காரரின் கையொப்பம் :................
*சொந்தக்காரரின் பெயர் :................
*சொந்தக்காரரின் முகவரி : ..............
*குடியிருப்பவரின் கையொப்பம் :..............
*குடியிருப்பவரின் முகவரி :..............
*தேவையற்றவைகளை கீறிவிடவும்.

அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

..........................,
தலைவர், கிராமாட்சி மன்றம்,
அட்டக்கலன் கோறளை மெதபற்றுக்
கிராமப்பிரதேசம்.

தொகை செலுத்தப்பட்டது.
நீர்வேலைத் திணைக்களத்திற்குத் தொடர்புபடுத்தியது.
வேலை முடிவுற்றதும் செய்யப்பட்ட அறிக்கை

தனிக்கோடான வளவின் மாதிரிப்படமொன்றில் குழாய் வாயில் களின் நிலையைக் காட்டி இதன்கீழ் உட்புகுத்தவும்.

குறிப்பு : (1) தண்ணீர்ச்சேவைக்கான விண்ணப்பங்கள் யாவும் அனு வலகப்படிவம் "அ" அளவிற் செய்யப்படவேண்டும்.

(2) தண்ணீர் சேவைக்கான விண்ணப்பங்கள் யாவும் மன் றத்தினுல் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(3) சொந்தத்தண்ணீர்ச் சேவைக்கு இணக்கம் அளிக்கப் பட்டவிடத்து மன்றத்தின் மூல அல்லது துணை இணைப் புக்களையும் சேவை செய்யப்பட வேண்டியனவையும் இணைக்கும் வேலை தலைவரினுல் அதிகாரம் வழங்கப் பட்ட ஓர் ஆட்சிமன்ற உத்தியோகத்தரின் மேற்பார்வை யில் நடைபெறும்.

(4) தனிப்பட்ட நீர்ச் சேவைக்கு ரூபா 20 அறவிடப்படும்.

(5) தலைவரினுல் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆட்களினுலேயே சேவைக்குழாய்களும் பொருத்துகளும் அமைக்கப்பட வும் இணைக்கப்படவும் வேண்டும். அத்துடன் தலைவரினுல் அதிகாரம் வழங்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரால் அனுமதிக்கப்படும்வரை உபயோகித்தலாகாது.

(6) வீட்டுத் தேவைகளுக்கென அளிக்கப்படும் நீருக்கான கட்டணம் மானி மூலம் அறவிடப்படும் அல்லது மானிகள் பொருத்தப்படாதவிடத்து துணைவிதி 16 இல் விதித்த வீதத்தின்படி அறிவிடப்படும்.

(7) ஒரு தனியார் சேவை அமைக்கப்பட்ட வீட்டின் அல்லது வளவின் சொந்தக்காரர் அல்லது குடி இருப்பவர் அவ்வீட்டில் குடி இருப்பவர் மாறுமிடத்து மன்றத் தலைவருக்கு முறையான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(8) சொந்தத் தண்ணீர்ச் சேவை அளிக்கப்பட்ட வீட்டில் அல்லது வளவில் குழாய் வாயின் மூலம் அல்லது மானியின் மூலம் அல்லது குழாய் மூலம் அல்லது பொருத்துக்களின் மூலம் வீட்டினுள் அல்லது வளவினுள் நீர் வீணைப் பாய்வதைக் கண்டவிடத்துத் மன்றத் தலைவருக்கு அறிவிக்க வேண்டியது ஒவ்வொரு, சொந்தக்காரரினதும் அல்லது குடியிருப்பவரினதும், கடமையாகும்.

..............................
விண்ணப்பகாரர்.

**படிவம் " ஆ "**

கிராமாட்சிமன்ற அலுவலகம்.

19.........

இலக்கம் :..........

அட்டக்கலன் கோறளை மெதப்பற்று கிராமாட்சி மன்றத்துடனான கணக்கு.

| திகதி | விவரணம் | ரூ. | ச. |
|---|---|---|---|
| | வீதியினுள்ள......இலக்க வீட்டுக்குச் சேவை அமைத்தலுக்கும் மானி பொருத்துவதற்கு வழங்கப்பட்ட பொருட்களுக்கும் மேலே சொல்லப்பெற்றவற்றின் தொடர்பான மேற்பார்வைக்கும் தொழிற்கூலிக்கும் மூலக்குழாயிலிருந்து குழாய் தொடுத்தற்கான கட்டணங்கள், தற்செயல் நிகழ்ச்சிகள் .. | | |
| | மொத்தம் | | |
| | வைப்புத் தொகை | | |
| | உரிய மீதி | | |

———,
தலைவர்.

கிராமாட்சி மன்றம்.

**படிவம் " இ "**

கிராமாட்சி மன்றம் அட்டக்கலன் கோறளை மெதபற்று

வீட்டுத் தேவைக்கல்லாத பிறதேவைக்கான மானிமூலமான நீர் வழங்கல் உடன்படிக்கை ஒன்று மதிப்பீட்டு இல.........கொண்ட வளவின் சொந்தக்காரர் ஒரு சாராராகவும்(இதனகத்துப் பின் " சொந்தக்காரர் " எனக் குறிப்பிடப்படுபவர்) அட்டக்கலன் கோறளை மெதபற்று கிராம ஆட்சி மன்றம் மறுசாராகவும் செய்துகொண்ட உடன்படிக்கை :

(2) மேலே குறிப்பிட்ட வளவுக்கு வீட்டுப் பாவிப்புக்கல்லாத வேறு பாவிப்புக்கென நீர் வினியோகம் அளிக்கப்படுமிடத்து, அஃதாவது :

(அ) .......................................

(ஆ) .......................................

(இ) .......................................

இதன் கீழ்த் தரப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப உடமையாளர்/ குடியிருப்பவர் இத்தால் ஒப்புக்கொள்கிறர் :

(1) நீர்..........அங்குல மானிமூலம் விநியோகிக்கப்படும்.

(2) சொந்தக்காரர்/குடியிருப்பாளர்

(அ) மானிமூலம் நீர் விநியோகிக்கப்படுமிடத்து—

(1) ஒரு காலாண்டுக்கான தொகையான ரூ............வை கிராமாட்சிமன்றத் தலைவருக்கு மானிவாடகையின் முற்பணமாகச் செலுத்தவேண்டும் அல்லது செலுத்த ஒழுங்கு செய்யவேண்டும்.

(2) ஒவ்வோர் மாதத்திற்கும் வழங்கப்படும் நீருக்கு ஒவ்வோர் ஆயிரம் கலன்களுக்கும் (ரூ. ..........) வீதத்தில் கிராம ஆட்சிமன்றத் தலைவருக்குச் செலுத்தவேண்டியது அல்லது செலுத்த ஒழுங்கு செய்ய வேண்டியது முதற் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டிய பணம்.......... முதல்நாளன்று செலுத்தப்படவேண்டும்.

(ஆ) மானி மூலமல்லாத வேறு வழிகளில் நீர் வழங்கப்படின் ஓர் காலாண்டுக்கு அல்லது அதன் ஓர் பகுதிக்கான கட்டணமான ரூபா..........என்னும் தொகையை கிராமாட்சி மன்றத் தலைவருக்குச் செலுத்தவேண்டும் அல்லது செலுத்த ஒழுங்கு செய்ய வேண்டும்.

(3) பணம் செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மானிக்கான வாடகைப் பணத்தை அல்லது தண்ணீருக்கான பிற கட்டணங்களைக் கிராமாட்சிமன்றத் தலைவருக்கு செலுத்தத் தவறின் இச்சேவையைப் பயன்படுத்துவதற்கான உரிமையை இழந்து விடுவார் ; அத்துடன் கிராமாட்சிமன்றமும் நீர் விநியோகத்தை நிறுத்தி விடுதலும் கூடும்.

(4) இந்த உடன்படிக்கையை ஏதாவது ஒரு சாரரால் மறுசாரருக்கு முப்பது நாள் அறிவித்தல் கொடுத்து இவ்வுடன்படிக்கையை முடித்துக் கொள்வதற்கான தனது அல்லது அதன் விருப்பத்தை தெரிவித்து முடித்துக் கொள்ளலாம். இப்படியானதோர் முடிவு செய்யப்படுமிடத்து இச்சேவையினைப் பயன்படுத்துவதற்குச் சொந்தக்காரருக்கோ, வளவின் குடியிருப்பவருக்கோ புதியதோர் உடன்படிக்கை செய்யுமளவும் உரிமை கிடையாது.

(5) குடியிருப்பவரில் மாற்றம் எதுவும் ஏற்பட இருப்பின் சொந்தக்காரர்/ குடியிருப்பாளர் தகுந்த அறிவித்தல் கொடுக்கவேண்டும். அத்துடன், மேலே சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத் தாம் நடப்பதாக எழுத்துமூலம் ஒப்புக்கொண்டாலேயன்றிக் குடியிருப்பவர் எவராகினும் இச்சேவையைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவராகார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து..........ஆண்டு............மாதம் ....................நாளன்று கையொப்பமிடப்பட்டது.
தேவையற்றவற்றைக் கீறிவிடுக.

சொந்தக்காரர்/குடியிருப்பவர்.
(1 ரூபா முத்திரையின் மேல் கையொப்பமிடப்படவேண்டும்.)

..............................,
தலைவர்.

கிராமாட்சி மன்றம்,
அட்டக்கலன் கோறளை, மெதபற்று.
கையொப்பத்திற்கான சாட்சிகள் :
1. ..........................
2. ..........................

**படிவம் " ஈ "**

இல. ....................

கிராமாட்சி அலுவலகம்,
அட்டக்கலன் கோறளை, மெதபற்று
கிராமாட்சிப் பிரதேசம்.
..................19......

..................முடிவடையும் காலாண்டுக்கு .............. வீதியினுள்ள ................இலக்க வீட்டிற்கு நீர் வழங்கியதற்குக் அட்டக்கலன் கோறளை மெதபற்று கிராமாட்சி சபையுடனான கணக்கு.

| தொடர் எண் | நீர்க் கணக்கு | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| .. | வாசிப்பு | .. | .. | — |
| .. | வாசித்த திகதி | .. | .. | — |
| .. | நுகர்ந்த நீர்..........ஆயிரம் | | .. | — |
| .. | கலன்கள்.............ரூ. வீதம் | | .. | — |
| .. | மானியின் மூலம் அளவிடப்படாத வீட்டுத் தேவைகளல்லாத வேறு தேவைகளுக்கு எனக் கொடுக்கப்பட்ட நீர்........... | | | |
| | வருமதியான தொகை | | | |

**கவனிக்குக.**

............என்னும் கிராமட்சிமன்ற அலுவலகத்தில் இதிற் குறித்த திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மேற்காட்டிய தொகையைச் செலுத்தும்படி கேட்கிறேன்.

**படிவம் " உ "**

கிராமாட்சிமன்ற அலுவலகம்,
அட்டக்கலன் கோறளை மெதப்பற்று
கிராமப் பிரதேசம்.
................19......

குறையுள்ள சேவையை மாற்றுவதற்கான அறிவித்தல் குடியிருப்பவர் அல்லது வீட்டுச் சொந்தக்காரருக்கு

இல..............வீதி.................

மேற்குறிப்பிட்ட வளவில் உள்ள சேவை சோதனையின்போது குறையுள்ளதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்பதை அறிந்து கொள்ளவும். இதன்பொருட்டு இதன் கீழ் என்னல் தேவையென உறுதிப்படுத்தப்பட்டு தரப்பட்டுள்ள மாற்றம் அல்லது திருத்தங்கள் யாவையும் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை யாவும் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்.

இவ்வறிவித்தல் கிடைக்கப்பெற்ற..........நாட்களுக்குள் செய்ய வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் யாவையும் செய்து முடிக்கத் தவறினல் நீர்ச் சேவைகள் யாவும் நீர் வசதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு அவை எனது திருப்திக்கேற்ப புதுப்பிக்கப்படும் வரை மாற்றும் வரை அல்லது திருத்தம் செய்யப்படும் வரை திரும்பவும் பொருத்தப்படமாட்டாது.

தலைவர்,
கிராமச் சபை,
அட்டக்கலன் கோறளை மெதபற்று.

8–890—24.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 74

# நானாவித அறிவித்தல்கள்

**முள்ளிப்பொத்தானை கிராம சபை**

*இறைச்சிக்காரர்பற்றிய சட்ட அறிவித்தல்*

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு மாடு, ஆடு அடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப்பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக் கிராமச்சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றது.

| இல. | விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | விரும்பும் தொழில் | தொழில் செய்யும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | மு. இஸ்மயில் | 343, யுனிட் 7, முள்ளிப்பொத்தானை | மாட்டிறைச்சி விற்றல் | 96 ம் கட்டை |
| 2 | அ. அப்துல் கறீம் | 302, யுனிட் 7, முள்ளிப்பொத்தானை | ஆட்டிறைச்சி விற்றல் | 96 ம் கட்டை |

ஜனாப். வை. அப்துல் ஜபார் ஜே. பி.,
தலைவர்,
முள்ளிப்பொத்தானை கிராம சபை.

முள்ளிப்பொத்தானை கிராம சபைக் காரியாலயம்,
முள்ளிப்பொத்தானை,
1973ம் ஆண்டு ஆவணி மீ 9 ந் உ.

8—934—24.08.73 ம் திகதிய வர்த்தமானி இல. 74

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**— குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.